# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 121/2023 நாள்.11.08.2025

PW3- திருமதி.வசந்தகுமாரி , த /பெ. திரு.மணிவண்ணன்

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த வழக்கு எதற்கு கொடுத்தேன் என்றால் கேசவன் இறந்துவிட்டதால் வாரிசு இல்லாததால் அவர் பாகத்தில் இருந்து பாகம் கோரியுள்ளேன். என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலத்தில் எவ்வளவு பாகம் சொல்லியுள்ளேன் என்றால் 5இல் 1பாகம் கோரியுள்ளேன். வழக்கின் சொத்தில் எவ்வளவு விஸ்தீர்ணம் என்றால் அப்பா வாங்கும்போது 1911 சதுரஅடி இருந்தது. 1319.73 சதுரஅடியில் 5 இல் 1 பாகம் நான் கோருகிறேன் என்றால் ஆமாம். 1911 சதுரஅடியில் 1319.73 போக மீதிஉள்ளது யாருக்கு சொந்தம் என்றால் பாலசந்தருக்கு சொந்தம். 1319.73 சதுரஅடி கேசவனுக்கு தீர்ப்பான பாகத்தைஅவர் நீதிமன்றம் மூலம் வசப்படுத்தினாரா என்றால் அண்ணனிடம்தான் இருந்தது. வசகட்டளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். 20.7.1979 இல் எனது அப்பா அவருடைய தனிபட்ட வருமானத்தில் மேற்படி சொத்தை வாங்கினார் என்றால் ஆமாம். அது பூர்விக சொத்து அல்ல என்றால் ஆமாம். அவ.எண் 92/1999 என்ற வழக்கை தஞ்சாவூர் சார்பு நீதிமன்றத்தில் என் அண்ணன் கேசவன் போட்டார் என்றால் ஆமாம். கேசவன், உமாராணி, ஜெயலெட்சுமி, பார்வதி ஆகியோர் சேர்ந்து அம்மா ராஜம் மற்றும் எனக்கும் என் மற்றொரு அண்ணனுக்கு எதிராக தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அந்த வழக்கு 11.7.2001 இல் முதல்நிலை தீர்ப்பாணையும், 28.8.2015 இல் இறுதிநிலை தீர்ப்பாணையும் பிறப்பிக்கபட்டது என்றால் ஆமாம். 11.7.2001 இல் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கபட்ட பின்னர் நான் என்னுடைய பாகத்தை அண்ணன் கேசவனுக்கு விடுதலை எழுதி கொடுத்தேன் என்றால் ஆமாம். அந்த ஆவணம் ஏற்கனவே வா.சா.ஆ.8 ஆக குறியாகியுள்ளது என்றால் ஆமாம். சகோதரிகள் ஜெயலெட்சுமியும் பார்வதியும் சேர்ந்து 08.10.2001 இல் கேசவனுக்கு அவ்வாறே விடுதலை எழுதி கொடுத்தார் என்றால் ஆமாம். அது வா.சா.ஆ.6 ஆக குறியாகியுள்ளது என்றால் ஆமாம். அதேபோல் 2வது வாதி உமாராணி 05.11.2003 இல் எனது அண்ணன் கேசவனுக்கு விடுதலை எழுதி கொடுத்தார் என்றால் ஆமாம். அது வா.சா.ஆ.7 ஆக

குறியாகியுள்ளது. அதற்கான ஒரு தொகையை கொடுத்துதான் விடுதலை எழுதி வாங்கினார் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் வா.சா.ஆ.8 இல் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் ஆமாம். கேசவன் எப்படி இறந்தார் என்றால் மோட்டார் வாகன விபத்தில் இறந்தார். எந்த இடத்தில் இறந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் விபத்து நடந்தது சீனிவாசபுறம், இறந்தது மருத்துவகல்லூரி மருத்துவமனை. மருத்துவமனைக்கு யார் கொண்டு போனார்கள் என்றால் எனக்கு தெரியாது. மருத்துவமனையில் யார் சேர்த்தது யார் பார்த்து கொண்டது என்றால் உமாராணிதான் செய்தார் தொலைபேசியில் அவர் என்னிடம் சொன்னார் நான் நேரடியாக அடுத்தநாள் போய் பார்த்தேன். என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலத்தில் 4 பக்கத்தில் பத்தி 9இல் நான் சொன்னதுபோல் உமாராணி மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்த்து பார்த்துகொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. 18.2.2020 இல் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். அவர் இறந்தபிறகு வாரிசு சான்று கேட்டு மனு கொடுத்தோம் என்றால் உமா கேட்டார் அவருக்கு போட்டு கொடுத்தேன். அதன் அடிப்படையில் வாரிசு கேட்டு பாலசந்தர் கொடுத்த மனுவாலும், உமா கொடுத்த மனுவாலும் அது மறுக்கபட்டதால் நீதிமன்ற வழக்கு உள்ளது என்றால் ஆமாம். யாரிடம் மனு கொடுக்கபட்டது என்றால் உமாவுக்குதான் அது பற்றி தெரியும். என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். என்னுடைய வாக்குமூலத்தில் அந்த அசல் வழக்கு எண் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம் அந்த எண் ஞாபகமில்லை. அந்த வழக்கு வாபஸ்ஸாகிவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் தள்ளுபடியாகிவிட்டதாக என்னிடம் சொன்னார்கள். யார்யார் மனுதாரர்கள் என்றால் சகோதரிகள் நான்குபேரும். பிரதிவாதி பாலசந்தர் ஆவார். நாங்கள் சகோதரிகள் நான்குபேரும் திருமணமாகி குழந்தைகளுடன் வசித்து வருகிறோம் என்றால் ஆமாம். ஏற்கனவே எனது தகப்பனார் வழக்கிடை சொத்தில் பாகத்திற்குரிய தொகையை பெற்று கொண்டு விடுதலை எழுதி கொடுத்தோம் என்றால் ஆமாம். பாகத்திற்குரிய தொகைகளை வாங்கியதால் சகோதரனுடைய சொத்து ஆகிவிட்டது என்றும் அதனால் நாங்கள் பாகம் கோரமுடியாகது என்று சொன்னால் அவருக்கு திருமணம் ஆகாததால் அதனால் நாங்களும் வாரிசுகள். சட்டப்படி கணவனிடமிருந்து பிரிந்த சகோதரி, திருமணமாகாத

சகோதரி விதவை, ஆகியோர் தான் வாரிசாக வரமுடியும் என்று சொன்னால் தவறு. அதற்கு பின்னிட்டு வேறு ஒரு அசல் வழக்கு எண் 123/2023 நடப்பில் உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்து முழுமையாக உள்ளது என்றும் அது பிரித்து எடுக்கப்படவில்லை என்றும் பாலசந்தர் அனுபவத்தில் உள்ளது என்றும் சொன்னால் கேசவன் அனுபவத்தில் இருந்தது அவர் இறந்தபிறகு பாலசந்தர் அனுபவத்தில் இருந்தது. வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் கேசவனுடன் பாலசந்தரும் சேர்ந்து அனுபவித்து வந்தார் என்றால் இல்லை. நான் இருப்பது நாஞ்சிகோட்டை சாலையில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். அதனால் என்னால் நேரடியாக அனுபவம் பற்றி சொல்லமுடியாது என்றால் ஆமாம். பிராதில் உள்ள கையெழுத்துகளில் என்னுடையது எது என்றால் 4வதாக உள்ள எல்லாம் பக்கத்திலும் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வா.சா.ஆ.8 இல் உள்ள என் கையெழுத்தும் பிராதில் உள்ள 4வதாக உள்ள கையெழுத்தும் என்னுடையதா என்றால் ஆமாம். அந்த கையெழுத்துக்கள் ஒரேமாதிரியாக உள்ளதா என்றால் நான் பொதுவாக என் அப்பா பெயர் இன்சியலை சேர்த்துதான் கையெழுத்து போடுவேன் பத்திரம் தயார் செய்யும்போது என் அண்ணன் என் கணவர் பெயரை இன்சியலாக போட்டு தயார்செய்திருந்ததால் அவ்வாறு கையெழுத்து போட்டேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள முதல்விசாரணை வாக்குமூலத்தில் D என்று தான் தாக்கல் செய்துள்ளேன். இறந்துபோன அண்ணனின் சொத்தில் சட்டப்படி கணவனிடமிருந்து பிரிந்த சகோதரி, திருமணமாகாத சகோதரி விதவை, ஆகியோர் தான் பாகம் கேட்க முடியும் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.